**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.10/2017**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயராகவலு | மதம் | : இந்து |
| த/பெ | : லோகநாதன் | ஜாதி | : -- |
| வயது | : 43 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : தனியார் தொழில் | வட்டம் | : திருத்தணி |

**17.04.2025**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

9. நான் எனது குறுக்கு விசாரணையில் எனது சொத்திற்கான கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளதில் அதன் ஆவண எண் சொல்லமுடியுமா என்றால் நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வாதி இரவோடுஇரவாக JCB இயந்திர உதவியுடன் தாவா சொத்தில் உள்ள சாலையை அகற்றியதாக கூறியுள்ளதற்கு ஆதரவாக காவல் நிலையத்தில் கொடுத்த புகாரோ அல்லது வேறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அ.வ.எண்.3/2000 பற்றி தெரியும் என நான் குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மீனாட்சி, ஜெயம்மாள், பக்தவச்சல நாயுடு, ராஜா மற்றும் மற்றொருவர் சேர்ந்து வாதியின் அப்பா மீது வழக்கு தாக்கல் செய்ததாக நான் சொல்லியுள்ளதில் அந்த வழக்கின் வழக்கு எண் சொல்லமுடியுமா என்றால் அந்த வழக்கு எண் தெரியாது.

10. நாங்கள் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று வழக்கு சொத்துதான் எங்களது வீட்டிற்கான பாதை என்று கூறியதற்கு நகராட்சியில் இருந்து எங்களுக்கு ஏதேனும் பதில் அளித்தார்களா என்றால் நாங்கள் நேரடியாக சென்று சொல்லிவிட்டு வந்தோம். எழுத்துமூலமாக மனு கொடுக்கவில்லை. அவர்கள் வந்து பார்ப்பதாக சொன்னார்கள். ஆனால் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்களுக்கு ஆதரவாக ஆவணங்கள்

எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் தேவையில்லாமல் வாதியை அளைக்கழிவு செய்கிறோம் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)